முதன்மை அமர்வு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை: **திருமதி.K.அறிவொளி, M.A., M.L.,**

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 30-ம் நாள் திங்கட்கிழமை

**குற்றவியல் மேல்முறையீடு வழக்கு எண்.105/2019**

*(CNR.No.TNSV01004856/2019)*

| | |
|---|---|
| விசாரணை நீதிமன்றம் | நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம், காரைக்குடி |
| விசாரணை நீதிமன்ற வழக்கு எண் | ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.34/2018 |
| மேல்முறையீட்டாளரின் பெயர் மற்றும் முகவரி | சத்யா (46/2019)<br>க/பெ.ராதாகிருஷ்ணன்,<br>30/13, மரகதம் தெரு,<br>கோட்டை கண்மாய், பர்மா காலனி,<br>காரைக்குடி, சிவகங்கை மாவட்டம். |
| எதிர்மேல்முறையீட்டாளர்/புகார்தாரர் பெயர் | சாத்தப்பன் (40/2019)<br>த/பெ.அய்யாவு,<br>3, வாடாமல்லி தெரு,<br>வள்ளுவர் நகர், பர்மா காலனி,<br>காரைக்குடி, சிவகங்கை மாவட்டம். |
| விசாரணை நீதிமன்ற தீர்ப்பு | விசாரணை நீதிமன்றம் எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றத்திற்கு எதிரிக்கு ஆறு மாதங்கள் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், அபராதம் ரூ.1,25,000/- விதித்தும், அபராதம் கட்டத்தவறினால் மூன்று மாதங்கள் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும் கு.வி.மு.ச பிரிவு 255(2)-ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. அபராதம் செலுத்துவதற்கு 30 நாட்கள் கால அவகாசம் வழங்கி உத்தரவிடப்படுகிறது. அபராதத்தொகை ரூ.1,25,000/-த்திலிருந்து ரூ.1,20,000/-த்தை புகார்தாரருக்கு நஷ்ட ஈட்டுத் தொகையாக வழங்க கு.வி.மு.ச பிரிவு 357(1)(பி)-ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த நாட்களை |

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.30 17:45:30 +0530

30.03.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

| | |
|---|---|
| | தண்டனை காலத்திலிருந்து கு.வி.மு.ச பிரிவு 428-ன் கீழ் கழித்துக் கொள்ள வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் இல்லை. |
| தண்டனை உறுதிபடுத்தப்பட்டதா, மாற்றியமைக்கப்பட்டதா அல்லது ரத்து செய்யப்பட்டதா, | **இறுதியாக,** இம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தும், காரைக்குடி, நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.34/2018-ல் கடந்த 26.11.2019-ம் தேதி அன்று பிறப்பிக்கப்பட்ட தண்டனை தீர்ப்புரையை உறுதி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. மேல்முறையீட்டாளர்/ எதிரி அபராதத் தொகையான ரூ.1,25,000/- (ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம்)த்தை ஒரு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், அத்தொகையிலிருந்து வழக்கு காசோலை தொகையான ரூ.1,20,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம்) புகார்தாரருக்கு நஷ்ட ஈட்டுத் தொகையாக கொடுக்க வேண்டுமென்றும், அவ்வாறு மேல்முறையீட்டாளர்/எதிரி நஷ்ட ஈட்டுத் தொகை உள்ளிட்ட அபராதத் தொகையை செலுத்த தவறும் பட்சத்தில் மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு மேலும் மூன்று மாதங்கள் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், மேல்முறையீட்டாளர்/எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த நாட்களை தண்டனை காலத்திலிருந்து கு.வி.மு.ச பிரிவு 428-ன் கீழ் கழித்துக் கொள்ள வேண்டுமென்றும், விசாரணை நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளர்/எதிரி தண்டனையை அனுபவிப்பதற்காக ஒரு மாத காலத்திற்குள் சரணடையுமாறும், அவ்வாறு மேல்முறையீட்டாளர்/எதிரி சரணடையத் தவறினால், அவரைச் சிறையில் அடைப்பதற்காக விசாரணை நீதிமன்றம் அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கவும் உத்தரவிடப்படுகிறது. |
| மேல்முறையீடு செய்யப்பட்ட நாள் | 18.12.2019 |
| ஆஜராகப் பணிக்கப்பட்ட நாள் | 20.01.2020 |

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.30 17:45:38 +0530

30.03.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

| இந்நீதிமன்ற தீர்ப்பு | 30.03.2026 |
|---|---|

இந்த குற்றவியல் மேல்முறையீடு என் முன்பு 12.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மேல்முறையீட்டாளர்/எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.*K*.முருகன் அவர்கள் நீதிமன்றத்தால் "*Amicus curiae*" ஆக நியமிக்கப்பட்டு ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டாளர் தானே நேரில் ஆஜராகியும், மேல்முறையீட்டாளர்/எதிரி தரப்பில் வாதங்களை கேட்டும், எதிர்மேல்முறையீட்டாளர் போதிய வாய்ப்பளித்தும், வாதுரைகளை சமர்ப்பிக்க நீதிமன்றத்தில் முன்னிலையாகாத நிலையிலும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றம் பரிசீலனையில் இருந்து இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**தீ ர் ப் பு ரை-**

இந்த குற்றவியல் மேல்முறையீட்டில், நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம், காரைக்குடி ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்:34/2018-ல் உள்ள எதிரி மேல்முறையீட்டாளர் ஆவார்.

**2. எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்துள்ள புகாரின் சுருக்கம்:-**

இம்மேல்முறையீடு குறிப்பிடும் வழக்கில் புகார்தாரரிடம் எதிரி அவரது மகனின் மருத்துவ செலவிற்காக பணம் கேட்டதில் புகார்தாரர் எட்டு பவுன் நகையை எதிரியிடம் கொடுத்து அதை ஒரு வார காலத்திற்குள் திருப்பித்தர சொல்லியிருக்கிறார் என்றும், ஆனால் ஒப்புக்கொண்டபடி எதிரி நகையை கொடுக்காததால் அதற்கு பதிலாக புகார்தாரருக்கு ரூ.2,00,000/- (இரண்டு இலட்சம்)த்தை எதிரி குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்திவிடுவதாக கூறி

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.30 17:45:45 +0530

அதற்கு ஆதரவாக எதிரி 166297 என்ற எண்ணுள்ள ரூ.1,00,000/- (ஒரு இலட்சம்)த்திற்குண்டான கார்ப்பரேசன் வங்கி, சங்கராபுரம் கிளை காசோலை ஒன்றையும்,166298 என்ற எண்ணுள்ள ரூ.1,00,000/- (ஒரு இலட்சம்)த்திற்குண்டான கார்ப்பரேசன் வங்கி, சங்கராபுரம் கிளை காசோலை ஒன்றையும், கடந்த 10.12.2017-ம் தேதி வசூலுக்கு தாக்கல் செய்து கொள்ளும்படி புகார்தாரரிடம் கொடுத்ததாகவும், புகார்தாரர் 166298 என்ற எண்ணுள்ள காசோலையை கடந்த 13.12.2017-ம் தேதி வசூலுக்கு தாக்கல் செய்த போது அது போதிய பணமில்லை என்ற குறிப்புச்சீட்டுடன் கடந்த 14.12.2017-ம் தேதியன்று திருப்பப்பட்டுவிட்டது என்றும், இதுசம்பந்தமாக புகார்தாரர் கடந்த 08.01.2018-ம் தேதி எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பை எதிரி கடந்த 09.01.2018-ம் தேதி பெற்றுக்கொண்டு பணமும் தரவில்லை என்றும், பதிலும் அனுப்பவில்லை என்றும், எதிரியின் மேற்படி செய்கையானது மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138 மற்றும் 142-ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய ஒன்று என்று இந்த தனி புகாரானது கு.வி.மு.ச. பிரிவு 200-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**3)** விசாரணை நீதிமன்றத்தின் முன்பாக புகார்தாரர் தரப்பில், ம.சா.1 முதல் ம.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4)** விசாரணை நீதிமன்றம் எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றத்திற்கு எதிரிக்கு ஆறு மாதங்கள் மெய்க்காவல்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.30 17:45:52 +0530

சிறைத்தண்டனை விதித்தும், அபராதம் ரூ.1,25,000/- விதித்தும், அபராதம் கட்டத்தவறினால் மூன்று மாதங்கள் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும் கு.வி.மு.ச பிரிவு 255(2)-ன் கீழும், அபராதம் செலுத்துவதற்கு 30 நாட்கள் கால அவகாசம் வழங்கியும், அபராதத்தொகை ரூ.1,25,000/-த்திலிருந்து ரூ.1,20,000/-த்தை புகார்தாரருக்கு நஷ்ட ஈட்டுத் தொகையாக வழங்க கு.வி.மு.ச பிரிவு 357(1)(பி)-ன் கீழ் உத்தரவிட்டுள்ளது. எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த நாட்களை தண்டனை காலத்திலிருந்து கு.வி.மு.ச பிரிவு 428-ன் கீழ் கழித்துக் கொள்ள வேண்டுமென்று தீர்ப்பு வழங்கியுள்ளது. மேற்படி தண்டனைத் தீர்ப்பில் குறைவுற்றதாக கருதிய எதிரி இந்த குற்றவியல் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

**5) மேல்முறையீட்டுக் குறிப்பாணையின் சுருக்கம்:-**

*i*) விசாரணை நீதிமன்ற தீர்ப்புரையும் சட்டத்தின் தன்மைக்கு எதிராகவும், உண்மை தன்மைக்கு மாறாகவும் சாட்சிய சான்றாவணங்களுக்கு எதிராகவும் உள்ளதாகவே தெரிய வருகிறது.

*ii*) விசாரணை நீதிமன்றம் மனுதாரர் தரப்பு சாட்சிய சான்றாவணங்களை சரிவர பரிசீலனை செய்து மேல்முறையீட்டாளர்/எதிரியை விடுதலை செய்திருக்க வேண்டுமே தவிர தண்டித்திருப்பதும் சரியானது இல்லை.

*iii*) விசாரணை நீதிமன்றம் இவ்வழக்கின் மிக முக்கியமான ம.சா.1 முதல் ம.சா.3 சாட்சியங்களை கவனத்தில் கொண்டு விசாரணை நீதிமன்றம் வழக்கில் மேல்முறையீட்டாளர்/எதிரியை விடுதலை செய்திருக்க வேண்டுமே தவிர

தண்டித்திருப்பதும் சரியானது இல்லை.

*iv)* இவ்வழக்கில் முக்கியமாக வழக்கின் முகாந்திரமான முதலில் புகார்தாரர் ரூ.1,00,000/-ம் கொடுக்க வசதி உள்ளவரா அல்லது முறையாக அனுமதி பெற்று வட்டி தொழில் எதுவும் நடத்துபவரா இல்லை அரசுக்கு வருமான வரி செலுத்துபவரா போன்ற விவரங்கள் விசாரணை நீதிமன்றத்தில் புகார்தாரர் தரப்பில் தெளிவாக எடுத்துரைத்திராத நிலையில் அதையும் விசாரணை நீதிமன்றத்தில் எதிரி தரப்பில் தெளிவாக எடுத்துரைத்து உள்ளதை விசாரணை நீதிமன்றம் சரிவர பரிசீலனை செய்து மேல்முறையீட்டாளர்/எதிரியை விடுதலை செய்திருக்க வேண்டுமே தவிர தண்டித்திருப்பதும் சரியானது இல்லை.

*v)* மேலும் விசாரணை நீதிமன்றத்தில் புகார்தாரருக்கு கொடுத்ததாக கூறப்படும் காசோலை உரிய பிரதி பிரயோஜனத்திற்காக கொடுக்கப்படவில்லை என்றும் உண்மையில் வழக்கு காசோலை கடன் அல்லது அதைச் சார்ந்த பொறுப்பிற்கு கொடுக்கப்பட்டதாக இருந்தால் மட்டுமே மாற்றுமுறை ஆவணச் சட்டப் பிரிவு 138-ன் படி தொடரப்படும் வழக்கு நிலைக்கததக்கதாகும். இவ்வழக்கு காசோலை பிரதி பிரயோஜனத்திற்காக கொடுக்கப்பட்டதா என்பதை பரிசீலிக்கும் போது மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றமும் மாற்றுமுறை ஆவணச் சட்டம் 138-ன் அனுமானமானது எதிரியால் முழுமையாக தீர்க்கப்பட வேண்டியது இல்லை என தெளிவாக குறிப்பிட்டு உள்ளதை தெளிவாக எடுத்துரைத்து உள்ளதையும் விசாரணை நீதிமன்றம் கவனத்தில் கொண்டு சரிவர பரிசீலனை செய்து மேல்முறையீட்டாளர்/எதிரியை விடுதலை செய்திருக்க வேண்டுமே தவிர

தண்டித்திருப்பதும் சரியானது இல்லை.

*vi*) மேலும் விசாரணை நீதிமன்றத்தில் புகார்தாரராக விசாரிக்கப்பட்டுள்ள ம.சா.1 புகார்தாரர் தனது சாட்சியத்தில் காசோலை வழக்கின் முதல் நிலையான வழக்கறிஞர் அறிவிப்பிலோ அல்லது புகாரிலோ அல்லது நிரூபண வாக்கு மூலத்திலோ எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்பது குறித்து விபரங்கள் இல்லாத நிலையை விசாரணை நீதிமன்றத்தில் எதிரி தரப்பில் தெளிவாக எடுத்துரைத்து உள்ளதையும் விசாரணை நீதிமன்றம் கவனத்தில் கொண்டு சரிவர பரிசீலனை செய்து மேல்முறையீட்டாளர்/எதிரியை விடுதலை செய்திருக்க வேண்டுமே தவிர தண்டித்திருப்பதும் சரியானது இல்லை.

*vii*) மேலும் விசாரணை நீதிமன்றத்தில் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள புகார்தாரர் தன்னுடைய முதல் விசாரணையில் முதலில் மகளின் மருத்துவ செலவிற்கு பணம் கேட்பதாக சாட்சியமளித்துவிட்டு பின்னீடு தன்னுடைய குறுக்கு விசாரணையில் மகனின் மருத்துவ செலவிற்கு கேட்டார் என்று முன்னுக்குப் பின் முரணாக சாட்சியமளித்துள்ள நிலையில் எதிரி யாருக்காக எந்த தேதியில் கடன் கேட்டார் எப்போது திருப்பி தருவார் என்பது குறித்து எவ்வித குறிப்புகளும் சாட்சியங்களும் இல்லை என்பதை தெளிவாக எடுத்துரைத்து உள்ளதை விசாரணை நீதிமன்றம் கவனத்தில் கொண்டு மேல்முறையீட்டாளர்/எதிரியை விடுதலை செய்திருக்க வேண்டுமே தவிர தண்டித்திருப்பதும் சரியானது இல்லை.

*viii*) பொதுவாக காசோலை வழக்குகளில் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றாலோ எதிரி வழக்கை பாதிக்காது என முன் தீர்ப்புகள் உள்ளதை தெளிவாக

KANNAYEERAM ARIVOLI Digitally signed by KANNAYEERAM ARIVOLI Date: 2026.03.30 17:46:12 +0530

எடுத்துரைத்து உள்ளதையும் விசாரணை நீதிமன்றம் கவனத்தில் கொண்டு மேல்முறையீட்டாளர்/எதிரியை விடுதலை செய்திருக்க வேண்டுமே தவிர தண்டித்திருப்பதும் சரியானது இல்லை.

*ix*) மேலும் விசாரணை நீதிமன்றம் சாட்சியங்களின் அடிப்படையில் தீர்வு காணாமலும் அனுமானத்தின் அடிப்படையிலும் தீர்வு காணாமலும் சூழ்நிலையின் அடிப்படையில் தீர்வு கொண்டுள்ளதும் சரியானது அல்ல.

எனவே, மேல்முறையீடுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மேல்முறையீட்டினை அனுமதித்தும், காரைக்குடி, நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம் கடந்த 26.11.2019-ம் தேதியன்று ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.34/2018-ல் வழங்கிய தீர்ப்பை நீக்கரவு செய்தும் உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) **<u>இந்த மேல்முறையீட்டில் தீர்வுக்குரிய பிரச்சினைகள்</u>**

1 விசாரணை நீதிமன்றம் எதிரி மீதுள்ள குற்றச்சாட்டான மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன்படியான குற்றச்சாட்டை புகார்தாரர் தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டிருப்பதாக கண்டுணர்ந்திருப்பது சரியானதா?

2 இந்த குற்றவியல் மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?

**<u>7) பிரச்சனைகள் : 1 மற்றும் 2</u>**

இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. விசாரணை நீதிமன்றத்தின் முன்பாக புகார்தாரர் தரப்பில் முன்னிடப்பட்டிருந்த மனுவை பரிசீலித்ததில், புகார்தாரரிடம் எதிரி அவரது மகனின் மருத்துவ செலவிற்காக பணம் கேட்டதில்

புகார்தாரர் எட்டு பவுன் நகையை எதிரியிடம் கொடுத்து அதை ஒரு வார காலத்திற்குள் திருப்பித்தர சொல்லியிருக்கிறார் என்றும், ஆனால் ஒப்புக்கொண்டபடி எதிரி நகையை கொடுக்காததால் அதற்கு பதிலாக புகார்தாரருக்கு ரூ.2,00,000/-(இரண்டு இலட்சம்)த்தை எதிரி குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்திவிடுவதாக கூறி அதற்கு ஆதரவாக எதிரி 166297 என்ற எண்ணுள்ள ரூ.1,00,000/- (ஒரு இலட்சம்)த்திற்குண்டான கார்ப்பரேசன் வங்கி, சங்கராபுரம் கிளை காசோலை ஒன்றையும்,166298 என்ற எண்ணுள்ள ரூ.1,00,000/- (ஒரு இலட்சம்)த்திற்குண்டான கார்ப்பரேசன் வங்கி, சங்கராபுரம் கிளை காசோலை ஒன்றையும், கடந்த 10.12.2017-ம் தேதி வசூலுக்கு தாக்கல் செய்து கொள்ளும்படி புகார்தாரரிடம் கொடுத்ததாகவும், புகார்தாரர் 166298 என்ற எண்ணுள்ள காசோலையை கடந்த 13.12.2017-ம் தேதி வசூலுக்கு தாக்கல் செய்த போது அது போதிய பணமில்லை என்ற குறிப்புச்சீட்டுடன் கடந்த 14.12.2017-ம் தேதியன்று திருப்பப்பட்டுவிட்டது என்றும், இதுசம்பந்தமாக புகார்தாரர் கடந்த 08.01.2018-ம் தேதி எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பை எதிரி கடந்த 09.01.2018-ம் தேதி பெற்றுக்கொண்டு பணமும் தரவில்லை என்றும், பதிலும் அனுப்பவில்லை என்றும், எதிரியின் செய்கையானது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன்படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் என கூறி விளக்கம் செய்யப்பட்டுள்ளது.

**8)** மேற்படி புகார் மனுவிற்கு ஆதரவாக எதிரி கைப்பட எழுதி புகார்தாரருக்கு கொடுத்ததாக முன்னிடப்பட்ட ம.சா.ஆ.1 காசோலையை பரிசீலனை செய்ததில், புகார்தாரர் பெயருக்கு 10.12.2017-ம் தேதியிட்ட காசோலை 1,00,000/-

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.30 17:46:26 +0530

30.03.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

என்ற தொகைக்கு கொடுக்கப்பட்டதாகவும், புகார்தாரர் மேற்படி காசோலையை கடந்த 13.12.2017 தேதியன்று புகார்தாரர் தனது வங்கி கணக்குள்ள கனரா வங்கி காரைக்குடி கிளையில் வசூலுக்கு தாக்கல் செய்த போது அந்த காசோலை கடந்த 14.12.2017-ம் தேதியன்று போதிய பணமில்லை என்ற குறிப்புடன் மறுக்கப்பட்டு திருப்பப்பட்டுவிட்டது என்ற காரணம் கண்டுள்ளது. மேற்படி காசோலை 14.12.2017 அன்று போதிய பணமில்லை என்ற குறிப்புச்சீட்டுடன் கனரா வங்கியால் திருப்பப்பட்டிருப்பதை ம.சா.ஆ.2-ன் மூலம் அறிய முடிகிறது. ம.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பில், குறிப்பாக புகார்தாரரிடம் எதிரி அவரது மகனின் மருத்துவ செலவிற்காக பணம் கேட்டதில் புகார்தாரர் எட்டு பவுன் நகையை எதிரியிடம் கொடுத்து அதை ஒரு வார காலத்திற்குள் திருப்பித்தர சொல்லியிருக்கிறார் என்றும், ஆனால் ஒப்புக்கொண்டபடி எதிரி நகையை கொடுக்காததால் அதற்கு பதிலாக புகார்தாரருக்கு ரூ.2,00,000/-த்தை எதிரி குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்திவிடுவதாக கூறி அதற்கு ஆதரவாக எதிரி 166297 என்ற எண்ணுள்ள ரூ.1,00,000/-த்திற்குண்டான கார்ப்பரேசன் வங்கி, சங்கராபுரம் கிளை காசோலை ஒன்றையும்,166298 என்ற எண்ணுள்ள ரூ.1,00,000/-த்திற்குண்டான கார்ப்பரேசன் வங்கி, சங்கராபுரம் கிளை காசோலை ஒன்றையும், கடந்த 10.12.2017-ம் தேதி வசூலுக்கு தாக்கல் செய்து கொள்ளும்படி புகார்தாரரிடம் கொடுத்ததாகவும், புகார்தாரர் 166298 என்ற எண்ணுள்ள காசோலையை கடந்த 13.12.2017-ம் தேதி வசூலுக்கு தாக்கல் செய்த போது அது போதிய பணமில்லை என்ற குறிப்புச்சீட்டுடன் கடந்த 14.12.2017-ம் தேதியன்று திருப்பப்பட்டுவிட்டது என்றும்,

எதிரி புகார்தாரரை மோசடி செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லாத போது மேற்படி காசோலையை கொடுத்து மோசடி செய்துள்ளதாகவும், எனவே இந்த அறிவிப்பு கிடைத்த 15 தினங்களுக்குள் புகார்தாரருக்கு கொடுக்க வேண்டிய மேற்படி காசோலை தொகையினை செலுத்தி கணக்கினை நேர் செய்து கொள்ள வேண்டுமென்றும், இல்லையெனில் மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் குற்ற வழக்கு தொடர நேரிடும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருந்ததை அறிய முடிகிறது. ம.சா.ஆ.4 ஆவணம் புகார்தாரர் தரப்பில் புகார்மனு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கான அத்தாட்சியாக முன்னிடப்பட்டுள்ள அஞ்சல் ஒப்புதல் அட்டை என்பதும் தெரிய வருகிறது.

**9)** புகார்தாரர் ம.சா.1 எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்ட போது, எதிரியின் கணவரைத்தானே நேரடியாகத் தெரியும் என்றால் இல்லை இருவரையும் தெரியும் என்றும், இவ்வழக்கு அறிவிப்பை தவிர எதிரிக்கு வேறு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றும், ம.சா.ஆ.3 அறிவிப்பிலோ, புகார் மனுவிலோ எதிரி எந்த தேதியில் கடன் கேட்டார். அந்த கடனிற்கு பதிலாக எந்த தேதியில் 8 பவுன் நகை கொடுத்தீர் போன்ற விபரங்கள் இல்லை தானே என்றால் ஞாபகம் இல்லை என்றும், ம.சா.ஆ.1 காசோலையை எதிரியின் கணவர் பூர்த்தி செய்து கொடுத்தார் என்றும், எதிரி அருகிலிருந்தார் என்றும், ம.சா.ஆ.1 காசோலையில் எதிரியின் கையொப்பம் தமிழிலும் மற்ற விபரங்கள் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருக்கிறது தானே என்றால்

KANNAYEERAM ARIVOLI Digitally signed by KANNAYEERAM ARIVOLI Date: 2026.03.30 17:46:41 +0530

30.03.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

ஆமாம் என்றும், அது அவரது கணவரால் பூர்த்தி செய்யப்பட்டது என்றும், எதிரி மன்றத்தில் கடன் பெறுவதற்காக உமது மனைவியிடம் கொடுத்திருந்த காசோலையை நீர் பூர்த்தி செய்து இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறீர் என்றால் இல்லை என்றும், எதிரியின் மகளுக்கு விபத்து ஏற்பட்டதால் எதிரி தன் மனைவியிடம் அழுது கதறியதால் 8 பவுன் நகையை தனது மனைவி கொடுத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**10)** புகார்தாரரின் மனைவி செல்வி என்பவர் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது முதல் விசாரணையில் தனது கணவரான புகார்தாரர் மளிகைக் கடை வைத்து தொழில் செய்து வருகிறதாகவும், தாங்களும், எதிரியும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதாலும், எதிரியின் கணவர் தனது கணவருடன் நல்ல முறையில் நட்பாக பழகி வந்தார் என்ற நிலையில் எதிரி தனது கணவரை தங்களது வீட்டிற்கு அணுகி எதிரி தனது மகனின் மருத்துவ செலவிற்கு தேவைப்படுவதாக கூறி 07.05.2016-ம் தேதி தொகை கேட்டதில் தான் கூறியதன் பேரில் 8 பவுன் நகையை தனது கணவர் எதிரியிடம் கொடுத்து 1 வார காலத்திற்குள் திரும்ப தர சொல்லி கொடுத்ததில் மேற்படி நகையை எதிரி உரிய காலத்திற்குள் கொடுக்காததால் மேற்படி நகைக்கு பதிலாக ரூ.2,00,000/- கொடுப்பதாக எதிரி தனது கணவரிடம் ஒப்புக்கொண்டார் என்றும், தனது கணவரான புகார்தாரருக்கு கொடுக்க வேண்டிய தொகையை எதிரி தான் கூறிய தவணை காலம் முடிந்த பின்பும் திரும்ப செலுத்தாததால் மேற்படி எதிரி மீது தனது கணவர் காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்து மேற்படி புகாரின்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.30 17:46:48 +0530

பேரில் மேற்படி எதிரி விசாரணை செய்யப்பட்டு தான் கடனாக பெற்ற தொகை மற்றும் 8 பவுன் நகைக்கான தொகை ரூ.2,00,000/- ஆகியவற்றை ஒரு மாத காலத்திற்குள் வட்டியுடன் திருப்பி தருவதாக கூறி எழுதி கையெழுத்திட்டு அதில் எதிரியின் கணவர் சாட்சியாக கையெழுத்திட்டுள்ளார் என்றும், அதன்பின்பும் மேற்படி தொகையை செலுத்தாமல் இழுத்தடித்து பின்பு தங்கள் வீட்டிற்கு வந்து அணுகி மேற்படி தொகையை 10.12.2017-ம் தேதிக்குள் திரும்ப செலுத்திவிடுவதாகவும் கூறி அதற்கு ஆதரவாக தான் கணக்கு வைத்திருக்கும் வங்கியின் இரண்டு வெவ்வேறு தேதியிட்ட காசோலைகளை கொடுத்தார் என்றும், மேற்படி இரண்டு காசோலைகளில் 166298 என்ற எண் கொண்ட காசோலையை 13.12.2017-ம் தேதியில் தனது கணவரான புகார்தாரர் தான் கணக்கு வைத்திருக்கும் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்த போது *Funds Insufficient* என்று மேற்படி காசோலையும் 14.12.2017-ம் தேதி திருப்பப்பட்டுவிட்டது என்று சாட்சியம் அளித்துள்ளார். ம.சா.2 தனது குறுக்கு விசாரணையில் தன் கணவர் யார் யாருக்கு கடன் கொடுத்திருக்கிறார் என்ற விபரம் தனக்கு தெரியும் என்றும், நான் தான் தன்னுடைய 8 பவுன் நகையை எதிரிக்கு கொடுத்தேன் என்றும், காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் தான் தன் கணவரோடு சென்றேன் என்றும், அங்கு தன் கணவர் புகார் கொடுத்தார் என்றும், எதிரியிடம் கொடுத்ததாக சொல்லும் 8 பவுன் நகைக்கு அவரிடமிருந்து ஏதும் ஆதரவு எழுதிப்பெறவில்லை என்றும், தான் மன்றத்தில் எதிரிக்கு கடன் பெற்றுத்தருவதாக சொல்லி அவரிடமிருந்து தாவா காசோலையை பெற்றேன் என்றால் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.30 17:46:55 +0530

30.03.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

**11)** ம.சா.3 தனது முதல் விசாரணையில் புகார்தாரர் மளிகைக் கடை வைத்து தொழில் செய்து வருகிறதாகவும், எதிரியும் ஒரே ஊரைச் சேர்ந்தவர் என்பதால் எதிரியையும் அவரது கணவரையும் தனக்கு நன்றாக தெரியும் என்றும், புகார்தாரரிடம் எதிரி தனது சொந்த செலவிற்காக 07.05.2016-ம் தேதி தொகை கேட்ட விபரமும், அதற்கு புகார்தாரரின் மனைவி அவரது 8 பவுன் நகையை எதிரியிடம் கொடுத்த விபரம் புகார்தாரரின் மனைவி கூறியதில் மேற்படி எதிரியை தான் மற்றும் பஞ்சாயத்தார்கள் வைத்து மேற்படி புகார்தாரர் கொடுத்த நகையை கேட்டதில் மேற்படி எதிரியும் அவரது கணவரும் நகையை கொடுத்துவிடுவதாக ஒப்புக் கொண்டனர் என்றும், மேலும் தனது தரப்பு வழக்கறிஞரை கூட்டி வந்து நகையோ அல்லது அதற்கு ஆதரவாக இரண்டு இலட்சம் தொகையோ கொடுத்துவிடுவதாக எதிரி ஒப்புக்கொண்டார் என்றும், இந்த விபரம் தனக்கு நேரடியாக தெரியும் என்றும், மேலும் எதிரி மீது புகார்தாரர் நகையை ஏமாற்றியது சம்பந்தமாக கடந்த 19.04.2017-ம் தேதியில் காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி புகாரின் பேரில் எதிரி விசாரணை செய்யப்பட்டு தான் கடனாக பெற்ற தொகை மற்றும் 8 பவுன் நகைக்கான தொகை ரூ.2,00,000/- ஆகியவற்றை திருப்பி தருவதாக கூறி எழுதி கையெழுத்திட்டும் அதில் எதிரியின் கணவர் சாட்சியாக கையெழுத்திட்டதாகவும், மேற்படி விபரம் தனக்கு நேரடியாக தெரியும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**12)** மேலும் இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர்/எதிரி மீது புகார்தாரர் நகையை ஏமாற்றியது சம்பந்தமாக கடந்த 19.04.2017-ம் தேதியில் காரைக்குடி

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.30 17:47:01 +0530

வடக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்பதும், மேற்படி புகாரின் பேரில் எதிரி விசாரணை செய்யப்பட்டு புகார்தாரர் சாத்தப்பன் மனைவி செல்வியிடம் போய் குடும்ப சூழ்நிலையை கூறினேன் என்றும், அப்போது செல்வி என்பவர் அவரிடமிருந்த எட்டு பவுன் எடையுள்ள தங்க நெக்லஸை கொடுத்து ஒரு வாரத்திற்குள் நகையை திருப்பி தரும்படி கூறினார் என்றும், தன் மகன் முத்துராமன் என்பவருக்கு விபத்தில் பெரிய காயம் ஏற்பட்டது என்றும், அப்போது தனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை என்றும், தான் செல்வி கொடுத்த எட்டு பவுன் நகையை விற்று தன் மகனை காப்பாற்றியதாகவும், தான் சாத்தப்பன் என்பவருக்கு தரவேண்டிய பணம் ரூ.2,00,000/- மற்றும் எட்டு பவுன் நகை இரண்டையும் சேர்த்து ரூ.2,00,000/-த்திற்கான வட்டியும் சேர்த்து வருகின்ற 19.05.2017-ம் தேதிக்குள் செலுத்தி விடுகிறேன் என்று காரைக்குடி வடக்கு காவல் நிலைய காவல் ஆய்வாளருக்கு மேல்முறையீட்டாளர்/எதிரி தன் கைப்பட எழுதி கையெழுத்திட்டும், மேலும் மேல்முறையீட்டாளர்/எதிரியின் கணவர் அதில் சாட்சி கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் ம.சா.ஆ.5-ன் மூலம் அறிய முடிகிறது.

**13)** மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன்கீழான புகார் மனுவை பொறுத்து சட்டப்படி செல்லத்தக்க கடன் அல்லது கட்டுப்பாடு புகார்தாரரை பொறுத்தமட்டில் காசோலை வழங்கிய எதிரிக்கு இருந்திருக்க வேண்டும். குறிப்பாக மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 139-ன் கீழாக சட்ட அனுமானம் புகார்தாரர், தன் தரப்பில் பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழான குற்றச்சாட்டை பொறுத்து குறிப்பாக சொல்லப்பட்டுள்ள அதன் உட்கூறுகளை முன்வைத்தால்

போதுமானதாகும். மேற்படி சட்ட அனுமானம் எதிரி தன் தரப்பில் தனியாக சாட்சியங்களை முன்னிட்டோ, அல்லது மனுதாரர் தரப்பில் முன்னிடப்பட்ட சாட்சியங்களை பொறுத்து குறுக்கு விசாரணை செய்யும் போது மனு சங்கதிகளுக்கு மாறான உண்மையை வெளிக்கொண்டுவரும் பட்சத்தில் மேற்படி பிரிவு 139-ன் கீழான அனுமானத்தை மறுத்துரைத்ததாக ஏற்றுக் கொண்டு மனுவினை தள்ளுபடி செய்ய இயலும். மாறாக பிரிவு 139-ன் கீழ் புகார்தாரருக்கு, அதாவது காசோலை பெற்றவருக்கு ஆதரவாக உள்ள சட்ட அனுமானத்தை உரிய வகையில் மறுத்துரைக்க எதிரி தவறினால், அவர் குற்றவாளியென தண்டிக்கப்படுவதில் குறிக்கிட வேண்டிய அவசியம் ஏதுமில்லை என்று நமது மாண்புமிகு உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் பல்வேறு முன் தீர்ப்புகளின் அறிவுறுத்தியுள்ளது.

**14)**இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய இம்மேல்முறையீட்டில், மேல்முறையீட்டாளர்/எதிரி தரப்பில் சொல்லப்படும் காரணங்களை விசாரணை நீதிமன்றத்தில் மனுதாரர் தரப்பில் முன்னிடப்பட்ட சாட்சி மற்றும் சான்றாவணங்கள் குறிப்பாக விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரையை பரிசீலித்ததில், கீழ்வரும் முன் தீர்ப்பு சங்கதிகள் எதிர்மேல்முறையீட்டாளர்/புகார்தாரருக்கு ஆதரவாக இருப்பதை இந்நீதிமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

*__Srinivasan Vs. State of Kerla 1999 (3) KLT 845__*

*Rigours of Section 138 cannot be escaped by such drawer (guarantor) so far as, the cheque issued for whatever reason, it may be by him for discharge of any debt or other liability, returned by the banker unpaid. Question of co-extensive liability of*

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.30 17:47:16 +0530

30.03.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

*the guarantor and principle debtor is found to be totally out of the purview of the said Section (No complainant can lie against the cheque issue as a security).*

***Naleena Vs. Arumugha Padayachi - 2015 (1) L.W 818 / CDJ 2014 MHC 6034***

*Section 118(a) presumption under N.I Act – the defendant fails to prove the non-existence of consideration by bringing on record such facts and circumstances which would lead this court to believe the non-existence of consideration either by direct evidence or by preponderance of probabilities showing that the existence of consideration was improbable, doubtful or illegal, the complainant is entitled to the benefit of presumption arising u/s. 118(a) of N.I Act.*

***MMTC Ltd., Vs. Medchi Chemicals and pharma (P) Ltd., AIR 2002 SC 182***

*There is no requirement that the complainant must specifically allege in the complaint that there was a subsisting liability. The burden of proving that there was not existing debt or liability is on the accused/drawer. This they have to discharge in the trial. Merely on the basis of averments in the petition filed by the accused u/s. 482 Cr.P.C, the High Court not have concluded that there was no existing debt or liability. Such question could have been tried and decided only at trial.*

**15)** மேற்கண்ட வகையில் விவரித்தவாறு விசாரணை நீதிமன்றத்தின் முன்பாக மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள் முன்னிடப்பட்டுள்ள நிலையில், அதிலும் குறிப்பாக இம்மேல்முறையீட்டாளர்/எதிரி தரப்பில் வாய்மொழி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிடப்படாத நிலையில் மாற்றுமுறை ஆவணச்சட்டம்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.30 17:47:23 +0530

பிரிவு 139-ன் கீழாக சட்டப்படியாக அனுமானம் காசோலை பெற்றவருக்கு அதாவது புகார்தாரருக்கு உள்ள நிலையில், அந்த அனுமானம் உரிய வகையில் இம்மேல்முறையீட்டாளர்/எதிரி தரப்பில் மறுத்தளிக்கப்படாததால், மனுதாரர் தரப்பில் முன்னிடப்பட்ட மனு சங்கதிகள் உரிய சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டிருப்பதாக ஏற்றுக்கொண்டு விசாரணை நீதிமன்றம் இம்மேல்முறையீட்டாளரை மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றவாளி என தண்டனை தீர்ப்பு வழங்கியுள்ளது. அதற்கு மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 141-ன்கீழான சட்ட வகையங்களையும், மனுதாருக்கு ஆதரவாக உள்ள பல்வேறு முன்தீர்ப்பு சங்கதிகளையும் தெளிவாக விவரித்து, அதாவது எதிரி காசோலை வழங்கியதையும், காசோலையில் கண்டிருப்பது தன்னுடையது அல்ல என்று மறுக்காத நிலையில், அதாவது ஒப்புக்கொண்டிருக்கும் நிலையில், வேண்டுமென்றே புகார்தாரரை ஏமாற்றும் நோக்கத்திலேயே தன் வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்று தெரிந்தே பின்தேதியிட்டு காசோலையை கொடுத்தது நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி காசோலை உரிய நேரத்தில் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டு ”போதிய பணமில்லை” என திருப்பப்பட்ட பின்னர் உரிய காலத்தில் வழக்கறிஞர் அறிவிப்பினை எதிரியின் முகவரிக்கு அனுப்பி இருந்த நிலையில், எதிரியை குற்றவாளி என தீர்மானித்து தண்டனை தீர்ப்புரை வழங்கியிருப்பதில் தவறேதும் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதவில்லை.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.30 17:47:30 +0530

30.03.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

**16)** அதிலும் குறிப்பாக விசாரணை நீதிமன்றத்தின் முன்பாக எதிரி தான் புகார்தாரரிடம் பணம் வாங்கவில்லை என்றோ, அதாவது தனக்கும் புகார்தாரருக்கும் இடையே ஏதும் இல்லை என்றோ, தான் அவ்வாறு கொடுக்க வேண்டிய பணத்திற்காக காசோலைகள் ஏதும் வழங்கவில்லை என்பதாகவோ, அதிலும் குறிப்பாக குறுக்குவிசாரணையில் புகார்தாரரிடம் கேட்கப்பட்டது போல், மேற்படி புகார் மனுவில் சொல்லப்படும் காசோலையை எதிரி, எதற்காக, எப்போது புகார்தாரருக்கு கொடுத்தார் என்பது குறித்தோ, மனுதாரருக்கு ஆதரவாக உள்ள சட்ட அனுமானத்தை மறுக்கும் பொருட்டு தன் தரப்பில் தனியாக சாட்சியங்களை முன்னிடவில்லை என்பது மட்டுமன்றி விசாரணை நீதிமன்றம் தெளிவாக விவாதித்திருப்பது போல் புகார்தாரின் சாட்சியங்களில் தனக்கு சாதகமாக எந்தவொரு சாட்சியத்தையும் எதிரி குறுக்கு விசாரணை செய்த போது பெறாத நிலையில், தன் தரப்பு ஆட்சேபணையை/கட்சியை நிரூபிக்கவும் இல்லை.

**17)** இந்நிலையில் விசாரணை நீதிமன்றம் வழங்கியுள்ள தண்டனை தீர்ப்புரையில் குறுக்கிட வேண்டிய அவசியம் ஏதுமில்லை என இந்நீதிமன்றமும் கருதுவதால், இம்மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதல்ல என கருதி இப்பிரச்சனைகளுக்கு விடை காணப்படுகிறது.

**இறுதியாக,** இம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தும், காரைக்குடி, நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.34/2018-ல் கடந்த 26.11.2019-ம் தேதி அன்று பிறப்பிக்கப்பட்ட தண்டனை தீர்ப்புரையை உறுதி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. மேல்முறையீட்டாளர்/எதிரி அபராதத் தொகையான

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.30 17:47:37 +0530

30.03.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

ரூ.1,25,000/-(ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம்)த்தை ஒரு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், அத்தொகையிலிருந்து வழக்கு காசோலை தொகையான ரூ.1,20,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம்) புகார்தாரருக்கு நஷ்ட ஈட்டுத் தொகையாக கொடுக்க வேண்டுமென்றும், அவ்வாறு மேல்முறையீட்டாளர்/எதிரி நஷ்ட ஈட்டுத் தொகை உள்ளிட்ட அபராதத் தொகையை செலுத்த தவறும் பட்சத்தில் மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு மேலும் மூன்று மாதங்கள் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், மேல்முறையீட்டாளர்/எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த நாட்களை தண்டனை காலத்திலிருந்து கு.வி.மு.ச பிரிவு 428-ன் கீழ் கழித்துக் கொள்ள வேண்டுமென்றும், விசாரணை நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளர்/எதிரி தண்டனையை அனுபவிப்பதற்காக ஒரு மாத காலத்திற்குள் சரணடையுமாறும், அவ்வாறு மேல்முறையீட்டாளர்/எதிரி சரணடையத் தவறினால், அவரைச் சிறையில் அடைப்பதற்காக விசாரணை நீதிமன்றம் அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைத் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 30-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.30 17:47:44 +0530

முதன்மை அமர்வு நீதிபதி,
சிவகங்கை.

**நகல்:-**
நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம்,
காரைக்குடி.

30.03.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.